1972 ஆகஸ்ட் 17]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்போது வாகன வரியாக தினம் ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அடிக்கடி—அன்ருடம் அந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் "சீசன் டிக்கட்"—குறைந்த கட்டணம் வசூலித்தல்—வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுப்பவர்கள் வாகன வரி வசூலிக்கிருர்கள்.

Widening of road in Thiruvettar.

* 137 Q.—THIRU J. JAMES : **Will the Hon. the Minister for** Public Works be pleased to state—

(*a*) whether there was a proposal for the widening of the road on either side of the bridge across the river at Thiruvettar in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த ரோட்டின் இரு பக்கமும் ஏகதேசம் 100 அடி ஆழமாக இருக்கிறது. பல தடவைகள் இந்த ரோட்டில் போகும் லாரிகளும், பஸ்களும் கவிழ்ந்து, உயிர் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ரோட்டை அகலப்படுத்த தேவையான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலையை அகலப்படுத்தவும், அந்த பாலத்தைப் புதுப்பிக்கவும் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.